


"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு மாநகரம், கொங்கு நகர் பகுதி கழகத்தின் சார்பில் பகுதி செயலாளர் போலார் இரா.சம்பத்குமார் தலைமையில் 20 வது வட்டச் செயலாளர் மு.நாசர் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சி.துரைமுருகன், இளம் பேச்சாளர் மங்களம் நஸ்ரின் பானு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், வடக்கு தொகுதி பொறுப்பாளர் பி.ராமமூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், 2ம் மண்டலத்தலைவர் தம்பி கோவிந்தராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்



மன்னார்குடி நகரில் அமைக்கப்பட்டுவரும் அதிநவீன பேருந்துநிலைய கட்டுமானப் பணிகளை நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் பார்வையிட்டனர். மன்னார்குடி நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழ ராஜன், நகர செயலாளர் வீரா கணேசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம், பண்ணந்தூர் ஊராட்சியில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமை தாங்கினார் . ஒன்றிய செயலாளர் க.மகேந்திரன் கூட்டத்திற்கு வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தலைமை கழக பேச்சாளர் சேர்க்காடு கென்னடி கலந்து கொண்டு நான்காண்டு சாதனைகளை குறித்து சிறப்புரையாற்றினர். மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கே.வி.எஸ் சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை, உள்ளிட்ட அனைத்து அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள் , அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் .



தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம், மூலனூர், குண்டடம் ஒன்றியங்களில் 8 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களால் வளர்க்கப்பட்டு வந்த ஆடுகளை நாய்கள் கடித்து இறந்தது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து ஆடு ஒன்றிற்கு ரூ. 6000/ வீதம் மொத்த 47 ஆடுகளுக்கு ரூ.2,82,000/ நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, தாராபுரம் வட்டாட்சியர் திரவியம், ஒன்றிய கழக செயலாளர்கள் ப.பழனிசாமி மூலனூர் கிழக்கு, துரை.தமிழரசு மூலனூர் மேற்கு, சு.சந்திரசேகரன் குண்டடம் மேற்கு, பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், தாராபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் துணைத்தலைவர் சசிக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை! அமைச்சர் கோவி.செழியன் தலைமை!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சாவூர் , மே 14 -

தஞ்சை தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசணைக் கூட்டம் கும்ப கோணத்தில் இன்று நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ; இன்று 14.05.2025 புதன் கிழமை அன்று மாலை 03.00 மணி யளவில் கும்பகோணம் ராயா அணுகிரஹா மஹாலில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் உள்ளிட்ட சட்டமன்ற தொகுதிகளில் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தல் குறித்து ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தஞ்சை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், உயர்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் கோ.வி.செழியன் தலைமை வகிக்கிறார்.

கழக முதன்மைச் செயலாளரும், மண்டலச் செயலாளருமான நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று கருத்துரையாற்ற உள்ளார்.

இதில் தொகுதி பார்வையாளர்கள் ந.செந்தில் (திருவிடைமருதூர்), பி.எம்.ஆனந்த் (பாபநாசம்), வி.சௌமியன் (கும்பகோணம்) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாநகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள், ஜுன் - 3, ஜுன் 1, மதுரையில் நடைபெறும் தி.மு.க. பொதுக் குழு கூட்டம், 3. மண்டல செயலாளர் கருத்துரை, கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.




கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் அரசின் "நாடு போற்றும் நான்காண்டுதொரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் அறிவுறுத்தலின்பேரில் ஒன்றிய செயலாளர் அ.இளங்குமரன் தலைமையில் இராஜாளி பட்டியலில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் தீக்கனல் செல்வம் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், விராலிமலை மத்திய ஒன்றியச் செயலாளர் கே.பி.அய்யப்பன், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், எம்.பாலமுருகன், க.சிவக்குமார், என்.வீராச்சாமி, என்.எஸ்.கே.நல்லதம்பி, நா.சி.பழனிச்சாமி, ஆர்.பி.எஸ்.கார்த்திகேயன் வித்யா ராஜேஸ், ஐஸ் கணேசன் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.




திருப்பூர் மத்திய மாவட்டம், தெற்கு மாநகரம், நல்லூர் பகுதி கழகத்தின் சார்பில்,49வது வார்டு சுப்பிரமணியம் நகரில் "நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் துடியலூர் என்.காளிச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் தெற்கு மாநகர செயளாலர் டி.கே.டி. மு.நாகராசன், பகுதி கழக செயலாளர் அ.பழனிசாமி, மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் சி.நந்தினி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈஞ்சம்பாக்கத்தில் குடிநீர் குழாய் அமைக்கும் பணி!

சென்னை, மே. 14 –

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க, சோழிங்கநல்லூர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. வழிகாட்டுத லின்படி 15 வது மண்டலக் குழு தலைவரும் பகுதி செயலாளருமான எ.மதியழகன் ஆலோசனைப்படி, சென்னை மாநகராட்சி ஈஞ்சம்பாக்கம் 194 வது வார்டு தெற்கு பெத்தேல் நகர் பகுதி மக்கள், கவுன்சிலர் கே.விமலா கர்ணாவிடம் குடிநீர் குழாய் அமைத்து தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று 12 இடங்களில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. அதனை மக்கள் பயன்பாட்டிற்கு கவுன்சிலர் விமலா கர்ணா துவக்கி வைத்தார்.

பின்னர் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

இதில் 194 வது (அ)வட்ட தி.மு.க. செயலாளர் குங்ஃபூ மாஸ்டர் எஸ். கர்ணா, மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

# சிறந்த நூல்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசு! விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 14 -

தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய்! இதுதான் நீ செய்தக்க எப்பணிக்கும் முதற்பணியாகும்!! என்னும் பாவேந்தரின் கவிதை முழக்கத்தைத் தமிழ்நாடு அரசு தலைமேற்கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன் முயற்சியின் விளைவுதான் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகச் செயற்படுத்தப் படும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் பெருந்திட்டமாகும். அறிவு வளர்ச்சியில் அக்கறை இல்லாச் சமூகம் உயர இயலாது என்பதை உணர்ந்தே தமிழ்ச் சமூகம் காலந்தோறும் செயலாற்றி வருகின்றது. வரலாறு அறியப்படாத காலம்தொட்டே இலக்கிய இலக்கணப் படைப்புக்களைத் தருவதில் தமிழ்வாணர்கள் ஏற்றமுடனே இருந்து வருகின்றனர் என்பது கண்கூடு. அந்நிலை இன்றும் தொடர்வதன் அறிகுறியே, இன்றும் தமிழில் எண்ணற்ற நூல்கள் வெளிவருவதே. காலந்தோறும் இந்நன்னிலை தொடருவதற்கே இப்பெருந்திட்டம் ஆக்கம் பெற்றுள்ளது.

அருவி நீர்த்துளிகளைப் போல ஆர்த்தெழும் நூல்களில், கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன் தரத்தக்கனவாக திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக அமைவன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமையாமையை உணர்ந்து, கதை புனைவோரை - காவியம் படைப்போரை - கட்டுரையாளர்களை - ஆய்வு முனைவோரை ஊக்குவிக்க, அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவினரால்; அரசால் வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப; வரப்பெறும் நூல்களை ஆய்வு செய்து அறிஞர்களின் மதிப்பீடுகளைப் பெற்று, தமிழுக்குத் தகத்தகாய நூல்களைப் படைத்தளித்த நூலாசிரியர் களுக்கும், அந்நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிப் பெருமை கொள்கின்றது.

அவ்வகையில், 2024 ஆம் ஆண்டில் (01.01.2024 முதல் 31.12.2024 வரை) தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் கீழ்க்குறி ப்பிட்டுள்ள 33 வகைப்பாடுகளின் கீழ், பரிசுப்போட்டிக்கு வரவேற்கப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூலாக ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரி யருக்குப் பரிசுத்தொகையாக ரூ.50,000/ அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுத் தொகையாக ரூ.25,000/ என ஒரு நூலுக்கு ரூ. 75,000/ வரை பரிசுத்தொகைகள் வழங்கப்பெறும்.

நூல் வகைப்பாடு:

1. மரபுக்கவிதை 2. புதுக் கவிதை 3. புதினம் 4. சிறுகதை 5. நாடகம் (உரை நடை, கவிதை) 6. சிறுவர் இலக்கியம் 7. திறனாய்வு 8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் 9. பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் 10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) 11. அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் 12. பயண இலக்கியம் 13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு 14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு 15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் 16. பொறியியல், தொழில் நுட்பவியல் 17. மானிட வியல், சமூகவியல், புவியி யல், நிலவியல் 18. சட்ட வியல், அரசியல் 19. பொரு ளியல், வணிகவியல், மேலாண்மையியல் 20. மருந்தியல், உடலியல், நலவியல் 21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) 22. சமயம், ஆன்மிகம், அளவை யியல் 23. கல்வியியல், உளவியல் 24. வேளாண்மை யியல், கால்நடையியல் 25. சுற்று ப்புறவியல் 26. கணினி யியல் 27. நாட்டுப்புறவியல் 28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் 29. இதழியல், தகவல் தொடர்பு 30. பிற சிறப்பு வெளியீடுகள் 31. விளையாட்டு 32. மகளிர் இலக்கியம் 33. தமிழர் வாழ்வியல் பரிசுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின் வலைதளத்திலோ (www.tamilvalarchithurai.org/siranthanool) இலவசமாகப் பதிவிறக்கம் (Download) செய்து பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் 10 ரூபாய் அஞ்சல் வில்லை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் 5 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100/ "தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை" என்ற பெயரில் வங்கிக் கேட்புக் காசோலை (Demand Draft) சேர்த்து அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள்: 16.06.2025

அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை 600 008. தொலைபேசி எண்கள். 044 28190412, 28190413




தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவுறுத்தலின்படி நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுகூட்டம் தர்மபுரி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி தலைமையில் வெண்ணாம்பட்டி ஹவுசிங் போர்ட் பகுதியில் நடைபெற்றது. கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் தலைமைக் கழக பேச்சாளர் சேலம்.தரணிதரன் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, மாவட்டப் பிரதிநிதி ரேணுகாதேவி, ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ்.சண்முகம், நகர கழக செயலாளர் நாட்டான் மாது, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மே.அன்பழகன், பிரதிநிதி பஸ்வராஜ், மாணவர் அணி கௌதமன்,ஐ.டி.விங் உதயசூரியன்,உள்ளிட்ட கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருவாரூர் நகர கழகம் சார்பில் நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் ஐ.பி.கோயில் வீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ, ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் புலிவலம் ஏ.தேவா, பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி, தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், ஜி.வரதராஜன் ஆகியோர் பங்கேற்று பேசினர். பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.